RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s752

OPEN ACCESS

# கவிஞர் அ.ச.மு. முனியாண்டி கவிதைகளில் எதார்த்தவாதம்

பொ. விந்தியகௌரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்-626001, தமிழ்நாடு, இந்தியா.

# Realism in the Poems of A.S.M. Muniandi

P. Vinthiya Gowri [a, *]

[a] Department of Tamil, V.V. Vanniaperumal College for Women, Virudhunagar-626001, Tamil Nadu, India

* Corresponding Author: vinthiyagowri@vvvcollege.org

Received: 26-12-2021
Revised: 20-04-2022
Accepted: 27-04-2022
Published: 30-07-2022

Check for updates

**ABSTRACT**

Literature is a life experience. Modern Tamil poetry inspires the thought of writing freely. Tamil poetry is broadly divided into two types: classical (i.e., Marabu Kavithai) and modern (i.e., Puthu Kavithai). Modern poetry has freed itself from the shackles of grammar. It has a wide range of songs. The definitions of poetry are new. He realised that poetry of experience, the poetry of longing, the poetry of longing, the poetry of anger, poetry of hope, the poetry of wisdom, and Tamil poetry will come, and he knows life and sings in Tamil. He has written a wonderful poem saying that God and poetry are one. He has created poetry, understanding that in modern times, there is more falsehood and less truth in man. The poet has established through his poems that realism is the aesthetic of modern times. In the poem, the poet's imagination can realize the promise of the candidate. He emphasises that those who want to make a career in life should first know themselves. Prayer is the highest, but that alone does not make a man live. He says, "Charity is needed and gives importance to actions with humanity." In his new poem, thinking of Buddha, he has created the life of people in Kaliyuga as it is. Through poetry, he criticises the people who live as uncivilised people because of the TV craze. While voicing support for religious harmony and world peace, it highlights the violence happening in the country. The aim of the article is to attempt to express the feelings and the community, which is emphasised in Muniandi's poems. The uniqueness of the poet is that he not only praises the height of love but also sings about the other side of love.

**Keywords:** Literature, New Poetry, Grammar, Love, Family, Society, Self-Reliance, Struggle of the Poor, Politics, World Unity

## முன்னுரை

மொழி என்னும் கருவி வாயிலாக வெளிப்படும் வாழ்க்கை அனுபவமே இலக்கியம். நல்ல இலக்கியங்கள் வாழும் இலக்கியம், நிலைபேறுடைய இலக்கியம் என அழைக்கப்பெறுகின்றன. இவை காலந்தோறும் மக்களோடும் அவர்கள் பிரச்சனைகளோடும் தொடர்பு கொண்டிருப்பவை. சமூக உறவுகளைக் கூறும் இலக்கியங்கள் நிலைத்த புகழ் உடையவையாக விளங்குகின்றன. வாழ்க்கை நிகழ்வுகளை உற்றுக் கவனித்துக் கற்பனை மிகாமல் உள்ளது உள்ளவாறு விளக்குவது எதார்த்தவாதமாகும். நடைமுறை வாழ்க்கையில் நடப்பனவற்றை மாற்றமின்றி எடுத்துக்கூறி அதற்குரிய காரணங்களையும் விளக்குவதாகும். அந்த வகையில் கவிஞர் அ.ச.மு. முனியாண்டி எழுதிய 'சூரியனைச் சுடுமா சூரியகாந்தி?' என்னும் கவிதைநூல் கவித்துவம் கொண்ட அருமையான படைப்பு. இந்நூலுக்கு, திருப்பூர் தமிழ்ச்சங்கம் வெள்ளிவிழா நிறைவு ஆண்டு 1993- 2019 சிறந்த கவிதை

நூலாகத் தேர்ந்தெடுத்து 05.02.2019 அன்று விருது வழங்கியது. கவிதைகள் உணர்த்தும் எதார்த்தவாதத்தை விளக்குவதே கட்டுரையின் நோக்கம்.

## புதுக்கவிதை இலக்கணம்

யாப்பு மரபுகளுக்குள் மூழ்கிவிடாமல் சிந்தனையைச் சுதந்திரமாக எழுதத் தூண்டியது புதுக்கவிதை என அறிஞர்கள் கூறுகின்றனர். இலக்கணத் தளைகளிலிருந்து கவிதை தன்னை விடுவித்துக் கொண்டது. பரந்த பாடுபொருளைப் பெற்றது. உருவ உத்தி முறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்தன. தமிழ்க் கவிதை வரலாற்றைப் பொறுத்த வரையில் புதுக்கவிதையின் முன்னோடியாகப் பாரதியாரைக் கூறுவர். பாரதியாரின் வசனகவிதை புதுக்கவிதைத் தோற்றத்திற்கு அடித்தளம் போட்டது. "சொல் புதிது, சுவை புதிது, பொருள் புதிது சோதிமிக்க நவகவிதை" எனப் பாரதியார் இதனைச் சுட்டுகின்றார் (Subbaiyah, 2007).

## கவிதை

சீனாவின் சிறப்பு மிகு சிந்தனையாளர் கன்பூசியஸ், "கவிதை மனிதனுடைய உள்ளத்தை எழுச்சியுறச் செய்கிறது. அதில் இழையோடும் ஒழுக்க நெறிக்கருத்துகள் மனிதனுடைய பண்பு நலனைப் பதப்படுத்தவும், பண்படுத்தவும் உதவுகின்றன" என்று தெளிவுறுத்தியுள்ளார் (Confucius, 2020). கன்பூசியஸ் கூற்றிற்கேற்ப கவிஞர் கவிதைகள் மக்களுடைய மனத்தில் நல்லெழுச்சியை உண்டாக்குகின்றன.

'எது கவிதை?' என்னும் வினாவுக்கு கவிஞர் நீண்ட கவிதை வடிவிலேயே விடை தந்துள்ளார். கவிதைக்கு வகுத்துத் தந்திருக்கும் வரைவிலக்கணங்கள் வருமாறு: கவிதை எனப்படுவது யாது எனின், சொப்பனச் சோம்பலில் சுருண்டு கிடப்பவரை வீரிய வார்த்தைகளால் எழ வைப்பது.

"தமிழ் முன் வரம் பெறுவது.

சிந்தனைச் சிறகை விரிப்பது.

நிலைத்து நின்று ஒளிதரும் நிலவு.

வாடி நின்ற மனிதரை வாழ வைப்பது.

கேள்விகள் ஆயிரத்தை உருவாக்குவது.

பிறரைச் சாதிக்க வைப்பது.

இருளில் உள்ளவர்க்கு ஒளி முகவரி தருவது.

உழைப்பவனின் வியர்வை, உயர்வைப் போற்றுவது.

விடியும் என்ற நம்பிக்கை.

ஏழைகளின் இரைப்பையை நிரப்புவது.

உழைக்கும் பாட்டாளியைக் கூட்டாளியாக்குவது.

எழுத்தால் தேசம் நிமிர்ந்து நிற்பது.

அறியா சனங்களின் அவலம் கண்டு அவர்களுக்குக் கரம் நீட்டுவது.

பூக்களைப் போல் எளிமையாகப் பறிக்கத்தக்கது"

'கவிதை வரும்' என்னும் தலைப்பில் படைத்த பிறிதொரு கவிதையில் கவிஞர் எனக்கும் கவிதை வரும், எனக்குள்ளும் கவிதை வரும் என்கிறார் (Muniyandi, 2017).

எண்ணம், சொல், செயல் நல்லதாக இருக்கும் உறவுகளால் மட்டுமே மனித உறவு மேம்படும்.

அடிநாக்கில் பகையும் நுனிநாக்கில் பாசமும் கொண்ட உறவுகள் உண்டு. ஒட்டாத உறவுகளும் உண்டு. கடுஞ்சொல், கொடுஞ்சொல் பேசும் வஞ்சக உறவுகளும் உண்டு கவிஞர் கவலைகளால் மனம் கருச்சிதைவு செய்யப்படும் போதும் இமைப் பறவைகளைக் கண்ணீர்க் கத்தி அதன் சிறகுகளை வெட்டும் போதும் வாச வயலில் விஷ விதையை உறவுகள் ஊன்றும் போதும் எனக்கு அனுபவக் கவிதை வரும் என்று பாடுகிறார்.

வீதியோரப் பெண்களின் விழிகளின் பார்வைக்கு விடை தேடித்தடி விடிய விடிய விழிக்கும்போது ஏக்கக் கவிதை வரும் என்ற கவிதையிலிருந்து ஏழைப்பெண்களின் அவல வாழ்வை உணரமுடிகிறது.

ஆராய்ச்சி மணியைக் குற்றவாளிகளுக்குக் கொடுத்துவிட்டு பசுக்களைத் தண்டிக்கும் போதும் அறியாத சனங்களின் அறியாமையை மூலதனமாக்கி அரியாசனத்தை அடையும் போலித் தலைவர்களைப் பார்க்கும்போது கோபக் கவிதை வரும் எனும் கவிதை நாட்டில் நடக்கும் அநியாயத்தை உணர்த்துகிறது.

வஞ்சகம் என்னை வாளால் வெட்ட துரோகம் என்னைத் தூக்கிலிடும் போது அவைகளை எல்லாம் புறம் தள்ளி மண்ணில் நான் மாண்புடன் வாழ எனக்கு நம்பிக்கைக் கவிதை வரும் என்று தன்னம்பிக்கையோடு கவிதை படைத்துள்ளார்.

இளமையில் ஆசை கழிய முதுமையில் ஆன்மா இளைப்பாற மரணத்தை எதிர்நோக்கும்போது ஞானக்கவிதை வரும் என வாழ்வியலைப் பதிவு செய்துள்ளார்.

எண்ணங்கள் நிறைந்திருக்க கற்பனைகள் குவிந்திருக்க வசந்த வார்த்தைகள் என் சிந்தனை வாசலை போட்டிபோட்டுக் கொண்டு தட்ட அள்ள அள்ளக் குறையாமல் தரும் அமுதசுரபி என மூளை இருக்க தப்பாமல் எனக்கு எப்போதும் தமிழ்க் கவிதை வரும் எனத் தன்னை உணர்ந்து தமிழ் மீது பற்றுக்கொண்டு பாடியுள்ளார் (Muniyandi, 2017).

## கடவுளும் கவிதையும்

கடவுளும் கவிதையும் ஒன்றுதான் என்று வித்தியாசமான அருமையான கவிதை படைத்துள்ளார். கடவுளிடம் கவிதை வாழ்கிறது. கவிதையிலும் கடவுள் வாழ்கிறார். இரைப்பை குறைப்பையாக இருக்கும் போது இரையைத் தேட விறைப்பாய் எழுதுவதும் கவிதைதான். இரைப்பை நிறைந்ததும் இதயப்பை நிறைய இறையைத் தேடுவதும் கவிதையை. தான் வளர்வது தெரியாமல் வளரும் மழலையின் புன்னகையும் கவிதைதான். அந்த மழலையின் வார்த்தையில் வாழ்வதும் கடவுள்தான். வாடும் மனிதர்கள் கண்ணீரில் வருவதும் கவிதைதான். வாடும் மனிதர்கள் கண்ணீரால் தேடுவதும் கடவுளைத்தான்.

அறிவை வானத்தைப் போல் விசாலமாக்குவதும் கவிதைதான் அந்த விலாசத்தில் அன்பை விதைப்பதும் கடவுள் தான். மூளைப்பையில் சிந்தனை முனைப்பை முன்னிறுத்துவதும் கவிதைதான். இதயப் பையில் பண்பை அன்பை நிரப்புவதும் கடவுள் தான். இருளையும் பகலையும் இலக்கியமாக்கித் தருவதும் கவிதைதான். அந்த இருளுக்கும் பகலுக்கும் இலக்கணம் கண்டது கடவுள்தான். தாயின் தாலாட்டு தங்கமான கவிதைதான். அந்த தங்கமான தாயைத் தந்தது கடவுள்தான். என்று மனித வாழ்வில் நடக்கும் எதார்த்தத்தைக் கற்பனையின்றி புதிய சிந்தனையில் கவிதையைக் கடவுளோடு ஒப்பிட்டுப் பாடியுள்ளார் (Muniyandi, 2017).

## கவிதைக் கீற்றுகள்

வாழ்க்கை வாழ்வதற்கே. சோகமாக இருக்கூடாது.

“வாழ்க்கை வீணையை வாசி!

சோக நரம்புகளை அறுத்தெறி!”

குறையில்லா மனிதனில்லை. குறைகளை நீக்கி நிறைகளைப் பார்த்து உறவுகொள்ள வேண்டும் (Muniyandi, 2017). நம்முடைய குறைகளை முதலில் களைய வேண்டும். பிறருடைய குறைகளை நீக்க ஆலோசனைகளைக் கூற வேண்டும்.

"குறையைக் களை!

வானில் பிறை நீ!"

நம்பிக்கைதான் வாழ்வில் மிக முக்கியம் என்பதை (Muniyandi, 2017),

"நம்பிக்கையை விதை

உன்னை யார்

அறுவடை செய்ய முடியும்?"

என்று மனதிற்கு வலிமை சேர்க்கிறார் (Muniyandi, 2017).

"கைகளால் அள்ளு!

இதயத்தால் வழங்கு!"

என்று பிறர்வாழ நாம் வாழவேண்டுமென்று வலியுறுத்துகிறார் (Muniyandi, 2017).

"அறியாமை ஆணவம்

இரண்டையும்

இடம் தெரியாது அழி!"

மனிதன் அறியாமையினாலே அழிந்து போகிறான் (Muniyandi, 2017). ஆணவத்தால் அழிவைத் தேடிக்கொள்கிறான். அதனால் இரண்டையும் அழிக்க வேண்டுமென்பதே கவிஞரின் எண்ணம்.

உடல்வலிமை மனவலிமைக்கு ஆதாரம். கதிரவனைப் போல் கடமை தவறாது வாழ வேண்டும்.

"கதிரவனைப் புஜமாக்கு!

கனவுகளை நிஜமாக்கு!"

சூரியனால் உயிர்கள் வாழ்வது போல் மனிதனால் பல உயிர்கள் வாழவேண்டும். அதற்குக் கனவை நனவாக்க வேண்டும் (Muniyandi, 2017).

காலம் பொன் போன்றது கடமை கண் போன்றது. கடமையைச் செய்தால் கவலையிருக்காது. களிப்பே மனதில் நிறைந்திருக்கும்.

"காலத்தைக் கொல்லாதே!

கண்ணீரில் நில்லாதே!"

தற்காலத்தில் மனிதனிடத்தில் பொய்மை அதிகமாகவும் உண்மை குறைவாகவும் இருப்பதை உணர்ந்து கவிதை படைத்துள்ளார் (Muniyandi, 2017). பஞ்சமாபாவங்களுள் முதலில் சொல்லப்படுவது பொய். பொய் பேசுவதைத் தவிர்த்து உண்மை மட்டும் பேசினால் வாழ்வு உன்னதமாக இருக்கும்.

"பொய்ம்மையைச் சுருக்கிடு!

உண்மையைப் பெருக்கிடு!" (Muniyandi, 2017).

## துளிப்பாப் பேழை

"ஐம்புலன்களுக்கும் அவற்றின் மையமான பகுத்தறிவுக்கும் உட்பட்ட அனுபவங்களை மட்டுமே கூறக்கூடிய இலக்கிய எழுத்துமுறை, மேலை நாட்டில் வலுப்பெற்ற பகுத்தறிவுவாதத்தின் விளைவாக

இது உருவாயிற்று. அனைவருக்கும் பொதுவாக அறியப்படக் கூடிய அனுபவங்கள் மட்டுமே இதில் கூறப்படுகின்றது. மன உணர்வுகள் கூட இந்தப் பொதுவான அறிதல் தளத்துக்கு உட்பட்டவையாகவே இருக்க வேண்டும். ஆகவே, யதார்த்தவாதத்துக்கு வாசகனிடம் நம்பகத்தன்மையை உருவாக்க வேண்டிய கட்டாயம் உண்டு. யதார்த்தவாதம் நவீன காலகட்டத்தின் அழகியலாகும்" (Jeyamohan, 1995).

'துளிப்பாப் பேழை' என்னும் உட்தலைப்பில் இடம் பெற்றிருக்கும் கவிஞரின் கவிதைகள் இன்றைய எதார்த்தத்தை எடுத்துக்காட்டுகின்றன.

"சுறாவிடம் தப்பிய மீன்

தூண்டில்காரனிடம் சிக்கியது

சுதந்திரம்!"

என்னும் துளிப்பா வெள்ளைக்காரனிடமிருந்து தப்பித்து மக்கள் கொள்ளைக்காரனிடம் சிக்கியதை உணர்த்துகிறது (Muniyandi, 2017). அன்றுமுதல் இன்றுவரை ஊழலைத் தடுக்க ஊழல் தடுப்புச் சட்டம் செயல்படுகிறது. ஆனாலும் நாட்டில் ஊழல் தொடர்வதை வாழையோடு ஒப்பிட்டு ஊழலை விமர்சிக்கிறார்.

"வெட்ட வெட்ட

முளைக்கும் வாழை

ஊழல்"

ஐந்தாண்டுக்கு ஒரு முறை அரசியல்வாதிகள் வாக்குறுதிகளை வழங்கி ஓட்டுக்கேட்டு மக்களை ஏமாற்றுவதும் மக்கள் ஏமாறுவதும் வாடிக்கை (Muniyandi, 2017). இதை,

"எத்தனை முறைதான் ஏமாறுவது

நிறுத்துங்கள் தேர்தலை

பாரதமாதா கூக்குரல்!"

என்று கவிஞர் கண்டனம் தெரிவிக்கிறார் (Muniyandi, 2017).

"நீரின் மேல் நிலவின் நிழல்

அள்ளிய கைகளில் எதுவுமில்லை

தேர்தல் நேர வாக்குறுதி!"

என்ற கவிதையில் கவிஞரின் கற்பனை வழி வேட்பாளரின் வாக்குறுதியை உணரமுடிகிறது (Muniyandi, 2017).

"கடமையைச் செய்! பலனை எதிர்பாராதே

வாக்களித்து விட்டு

வாயைத் திறக்காதே"

என்ற கவிதை மூலம் வாய்ப்பூட்டுச் சட்டத்தை அமலாக்கும் அரசியல்வாதிகளின் அதிகாரத்தை வெளிப்படுத்துகிறார் (Muniyandi, 2017).

"வெறும் புள்ளியைப்

பெரும் புள்ளியாக்கும் கரும்புள்ளி!

தேர்தல்"

என்ற கவிதை அரசியல் நடப்புகளை எடுத்துக்காட்டுகிறது (Muniyandi, 2017).

பிறரை அறிந்தவன் அறிவாளி. தன்னை உணர்ந்தவன் ஞானி. தன்னை அறியாதவன் பிறரை அறியமுடியாது. தன்னையறிந்தவனால் மட்டுமே தன்னையும் வெல்ல முடியும் பிறரையும் வெல்ல முடியும். வாழ்வில் வாகை சூட நினைப்பவர்கள் முதலில் தன்னையறிந்தவர்களாக இருக்க வேண்டும். இல்லையேல்

"நண்பனும் இல்லை

எதிரியும் இல்லை

தன்னை யறியாதவனுக்கு"

என்று வாழ்வில் விழிப்புடன் இருக்க அறிவுறுத்துகிறார் (Muniyandi, 2017). மனிதனிடம் உயர்வான எண்ணம் மட்டும் இருந்தால் போதாது. தொண்டுள்ளம் தொடர்ந்து இருக்க வேண்டும். பிரார்த்தனை உயர்வானது தான். ஆனால் அதுமட்டுமே மனிதனை வாழ வைக்காது என்பதை,

"உயர்வானது

உதடுகளின் பிராத்தனை அல்ல

உதவும் கரங்களே!"

என்று மனிதநேயத்தோடு செயல்களுக்கு முக்கியத்துவம் தருகிறார் (Muniyandi, 2017).

"நண்பனிடம் கொடுத்த கடன்

நீண்ட நாட்களுக்குப் பின்

திரும்பி வந்தது பகையாக

கடனுக்கு

கரும்பு வாங்கிக்

கடித்தேன் கசந்தது."

கடன் கொடுப்பதும் தவறு. கடன் வாங்குவதும் தவறு (Muniyandi, 2017). திட்டமிட்ட வாழ்வே சிறப்பு. கடன் அன்பை முறிக்கும் என்பது அகிலம் அறிந்ததே. "கடன்பட்டான் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்ற பழமொழிக்கேற்ப கடன்பட்டார் நெஞ்சம் அவமானத்தால் கலங்கும்; வாழ்வும் கசக்கும் என்று கடன்பட்டார் மனநிலையை உணர்ந்து எடுத்துரைக்கிறார்.

## குறுங்கவிதை

"வட்டிக்குப்

பணம் வாங்கினேன்

வீடும், நிலமும்

வட்டிக்குள் வீழ்ந்து

தற்கொலை செய்து

கொண்டன!

வட்டிக்குப் பணம் வாங்கி

வீடு கட்டினேன்.

தினமும் பூகம்பம் நெஞ்சில்

கடன்காரனைப் பார்த்து!"

எனும் கவிதைகள் வட்டிக்குப் பணம் வாங்கி வட்டி கட்டமுடியாமல் விழ்ந்துபோகும் சாதாரண மக்கள் வாழ்வில் நிகழும் இழப்புகளையும் அவமானங்களையும் அம்பலப்படுத்துகின்றன (Muniyandi, 2017).

ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்றார் புத்தர். ஆசையாலே மனிதன் அனைத்தையும் இழக்கிறான். மனிதன் மனிதநேயத்தோடு வாழ வேண்டும். ஆனால் அநேகர் அப்படி வாழ்வதில்லை. கவிஞர் புத்தரை நினைத்து, ஆசையைத் துறந்தால்

“மனிதன் என்றாய்

ஆசையைத் தவிர

அத்தனையும் துறந்துவிட்டோம்

அன்பைத் துறந்தோம்

பண்பைத் துறந்தோம்

பாசத்தைத் துறந்தோம்

வேசத்தை அணிந்தோம்

உனக்குப் போதி மரம்

எங்களுக்குச் ‘சாதி மரம்’

நீ மனித நேயத்தில்

தங்கிக் கொண்டிருந்தாய்

நாங்கள் மதத்தில்

தொங்கிக் கொண்டிருக்கிறோம்

உதட்டில் புன்னகை வங்கியை மூடிவிட்டு

உனக்குள் அன்பு முளைத்தது

எமக்குள் வம்பு தழைத்தது”

என்று கலியுகத்தில் மனிதர்களின் வாழ்க்கை நடப்பியலை உள்ளது உள்ளபடியே படைத்துள்ளார் (Muniyandi, 2017).

## நிரல் கவிதைகள்

நிரல்படுத்தி பாடிச் செல்வது கவிதை உத்தி, கவிஞர், சில உயிர்ப்பான வரிகளை-நிரல்பட அமைந்த கருத்தியல்களை சிறப்பாகப் பாடியுள்ளார்.

பண்டைத் தமிழர் விருந்தோம்பல் பண்புடன் வாழ்ந்தனர். தமிழில் விருந்தினர் என்று சொன்னால் சொந்தக்காரர் என்பதல்ல. புதிதாக வந்தோர் என்றுதான் பொருள். புதிதாக வந்தவருக்கு உணவளித்து, உபசரிக்க வேண்டியது இல்லறத்தாருடைய கடமையாக வற்புறுத்தப்பட்டது.

“விருந்தினர்களைக் காக்க வைத்துவிட்டு

தொலைக்காட்சித் தொடர்களே

கதிஎன்று கிடக்கும் போது

தமிழ்நாட்டின் விருந்தோம்பலைக்

கொல்கிறோம்.”

என்று தொலைக்காட்சி மோகத்தால் பண்பற்றவர்களாய் வாழும் மக்களைச் சாடுகிறார் (Muniyandi, 2017).

“முயலாய் ஓடி வேகமாய்

முன்னேறியவர்களை முடக்கி விட்டு

ஆமையாய் வந்தவர்களை

கௌரவப் படுத்தி நன்றாக

உழைப்பவர்களின்

உழைப்பைக் கொல்கிறோம்”

என்று உழைப்பவர்களுக்கு நிகழும் அநியாயங்கள் நிரல்படுத்தப்பட்டுள்ளன (Muniyandi, 2017).

## சமுதாயப் பதிவுகள்

“தமிழ்க் கவிதை வரலாற்றில் சங்கக் கவிதைகளுக்குப் பிறகு உணர்வுகளை முன்னிறுத்தி சமூகத்தை வெளிக்காட்டும் முயற்சி அழுத்தமாகப் புதுக்கவிதைகளில்தான் இடம் பெறுகிறது எனலாம்”. என மொழிவார் பேராசிரியர். அவரது கூற்றினை மெய்ப்பிக்கும் வகையில் ‘சமுதாயப் பதிவுகள்’ என்னும் பகுப்பில் நிறையக் கவிதைகள் காணப்படுகின்றன.

“விழுந்து விழுந்து

கேள்விக் குறியானவர்களின்

கரங்களில்

தலைநிமிர முடியாத நிலையில்

தேசம்.”

என இன்றைய தேசத்தின் உண்மை நிலையை அம்பலப்படுத்தும் போதும், ஒரு இந்து திரியாக இசுலாமியர் நெய்யாக கிறித்தவர் விளக்காக உலகம் உள்ளவரைக்கும் மங்காது எரியட்டும் சமாதான விளக்கு என மத நல்லிணக்கத்திற்காகவும் உலக சமாதானத்திற்காகவும் குரல் கொடுக்கும் போதும் (Muniyandi, 2017),

“சமத்துவச் சக்கரங்களை இழந்த

மனித நேயத் தேர்

வன்முறைப் பாதையில்

குருதியில் குளித்தபடி

தோட்டாக்களுக்குப் பயந்த

சமாதானப் புறாக்கள்

காப்பாற்ற வேண்டி

கசாப்புக்கடையில் தஞ்சம்”

என நாட்டில் நிகழும் வன்முறைகளை எடுத்துரைக்கும் போதும், உணர்வுகளை முன்னிறுத்தி சமூகத்தை வெளிக்காட்டும் முயற்சி முனியாண்டியின் கவிதைகளில் அழுத்தமாக இடம் பெற்றுள்ளன (Muniyandi, 2017).

## காதல் உலகு

காதல் என்பது உள்ளத்தைக் கவர்ந்து உணர்வில் கலந்து இனிய இன்பத்தைத் தருவது. மனிதனை மேம்படுத்துவதும், அவனுள் இருக்கும் அற்புத சக்தியை வெளிக் கொணர்வதும் காதலே. உலகப் படைப்புகள் அனைத்திலும் காதல் உண்டு. பகுத்தறியும் திறம்பெற்ற மனிதக் காதல் அவற்றுள் தலைசிறந்தது.

“காதல் என்பது இன்பத்துள் பேரின்பம், உணர்ச்சியுள் பேருணர்ச்சி, ஆற்றலுள் பேராற்றல், அடிப்படையுள் பேரடிப் படை, உரிமையுள் எல்லார்க்கும் உரியது, நட்பினுள் இருபாலாரையும் இணைப்பது, கல்வியுள் கசடறக் கற்க வேண்டுவது, நாணினுள் நனி நாணுடையது, ஒழுக்கத்துள் விழுமியது” எனக் காதலுக்குப் புகழாரம் சூட்டுவர் (Manickam, 2007). இத்தகைய காதலின் மென்மையையும் மேன்மையையும் கவிதைகளில் அழகுற எடுத்துக்காட்டியுள்ளார்.

“நதிக்குக் கரை
மதிக்கு மறை
ஞானத்திற்குக் கவிஞன்
கானத்திற்குக் கலைஞன்
வாழ்க்கைக்கு நீ!”

எனக் காதலின் உறவினைக் கவிதையில் போற்றிப் பாடியுள்ளார் (Muniyandi, 2017).

“நான் மலரோடு வந்தேன்
நீ மலர்வளையத்தோடு வந்தாய்
மகாகாவியம் எழுதப்
புறப்பட்டவனை
நீ முற்றுப்பபுள்ளியாக்கி
விட்டாய்!”

இங்ஙனம் காதலின் உயர்வை மட்டும் போற்றாமல் காதலின் மறுபக்கத்தையும் உள்ளது உள்ளபடி பாடி இருப்பது கவிஞரின் தனித்தன்மை (Muniyandi, 2017).

“புரிந்துகொள்
புருசா!
பொன்நகை இல்லை
உன்னிடம் புன்னகை இல்லை!
இதுவா இல்லறம்?
உன்னிடமில்லை நல்லறம்.
என் கண்களைப் பார்!
உனது கலங்கரை விளக்கம்
மட்டுமல்ல…
உனது கனவுகளின் ஆலயம்
உனது கண்ணீரைத் தாங்கும்
கடலும் கூட…”

என்று சமூகத்தில் புதிய வேர்களாய் இருப்பதே வாழ்க்கை! என வழிகாட்டுகிறார் (Muniyandi, 2017). பரந்த உலகை நோக்கி அறிவின் பார்வையை விசாலம் ஆக்குமாறும், நட்பின் எல்லையை விரிவாக்கு மாறும் கவிஞர் இளையோர்க்கு அறிவுறுத்துகின்றார்.

## குடும்பம்

குடும்பம் என்பது தாய், தந்தை, மகன், மகள், அவர்தம் உறவினர்களை உள்ளடக்கியதாகும் பொதுவாக தந்தைக்கு மகள் மீதும் தாய்க்கு மகன் மீதும் அன்பு மிகுதியாக இருக்கும் என்பர் உளவியல் வல்லுநர். ஆனால் இக்காலத்தில் பெரும்பாலான உறவுகள் உண்மையான அன்போடு இருப்பதில்லை. அன்புள்ள தாத்தாவுக்கு, பாட்டிக்கு! நீங்கள் முதியோர் இல்லத்தில் நலமா? நான் மட்டும் நலமில்லை. பெற்றோரது அன்பு கிடைக்காத ஒரு பேரன் எழுதும், கடித வடிவில் இடம் பெற்றிருக்கும் கவிதை முத்திரைக் கவிதை.

"என் வெண்டைப் பிஞ்சுவிரல் பிடித்து

வீதியில் நடந்தபடி வீரக்கதைகள்

சொல்ல நீ (தாத்தா) இல்லை!

விளையாடிக் களைத்து வந்தபின்

தலையைக் கோதி

மடியில் போட்டுக்கொள்ள

பாட்டி இல்லை" (Muniyandi, 2017)

எனத் தனது இழப்புக்களை உருக்கமாகப் பதிவு செய்து,

"நீ இருக்கும்

முதியோர் இல்லத்தில்

அவர்களுக்கும்

இடம் போட்டு வை

இந்தச் சூழலில்

வளர்ந்ததால்

அவர்களை அங்குதானே

அனுப்ப முடியும்?"

என்னும் பேரனின் உணர்ச்சி மிகு கேள்விக்கணையோடு கவிதை நிறைவு பெறுவது முத்தாய்ப்பு (Muniyandi, 2017).

## முடிவுரை

கவிஞர் கவிதைகளில் காதல், குடும்பம், சமூகம், ஏழைகளின் போராட்டம், மனிதநேயம், அரசியல் பார்வை, மத ஒற்றுமை, உலக ஒற்றுமை ஆகியவை எதார்த்தவாத நோக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளன. புறவுலகு பற்றிய கவிஞனின் நோக்குமட்டுமில்லாமல், அவனது கவிதையை வாசிக்கும் மக்களின் நோக்கும் மாறுகிறது. கனவுலகு பரவுகிறது. புறவுலகை மாற்றும் ஆர்வமும் உறுதியும் வளருகிறது. கனவிலும் கற்பனையிலும் பிறக்கும் கவிதைகள் புறவுலகை மாற்றும் சக்தியை, கவிதையுலகில் நுழைந்து புறவுலகிற்குத் திரும்பும் மக்களுக்கு அளிக்கிறது.

## References

Confucius, (2020) The Analicts of Confucius, Pretorian Books, Chennai, India.

Jeyamohan, (1995) Naveena Thamizhilakkiya Arimugam, Uyirmmai Pathippagam, Chennai, India.

Manickam, V.S., (2007) Tamil Kadhal, Meiyappan Pathippagam, Chidambaram, India.

Muniyandi, A.S.M., (2017) Muniyandi Kavithaikal, Alai Pathippagam, Chennai, India.

Subbaiyah, Aranga., (2007) Ilakiya Thiranaivu Isangal, Kolgaikal, Paavai Veeliyeedu, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License